நேரடி பணிமுறைக்கே தற்போது ஒதுக்கீடு முறை அமலில் உள்ளது. இதுவரை ஆய்வு செய்துள்ள மிகுதியான அலுவலகங் களில் நேரடி பணிமுறைக்கு வழி இருந்தும், பதவி உயர்வு மூலமே பணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள் தங்கள் ஒதுக்கீட்டு நிய மனங்களை அடைய முடியவில்லை. ஆகவே இவ்வலுவலகங்கள் அர சினை அணுகி நேரடி பணித் தேர்வுக்கும் பதவி உயர்வுக்கு பணித் தேர்வுக்கும் விகிதாச்சாரம் பெற வேண்டுமெனக் கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளன.

சில தலைமை அலுவலகங்கள் பணித் தேர்வுக்கென அமைந்த விதி முறைகள் மற்றும் சிறப்பு விதிமுறைகளில் நேரடி பணித் தேர்வு செய்ய வேண்டுமென்க் குறிப்பிட்டிருந்தும் அதில் பொது விதி 22-ன்படி நியமன ஒதுக்கீடு அமைக்க அரசு உத்திரவுகளைப் பெறுமல் இருந்து வருகின்றுர்கள். அம்மாதிரி அலுவலகங்களில் ஆய்வுக் குறிப்பில் அவர்களை நேரடிப் பணித்தேர்வு மூலமாகக் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது பொது விதி 22 கடைப் பிடிக்க அரசு அனுமதி பெறக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கி ருர்கள்.

Concessional tickets to Students of Institute of Engineering Technology

*602 Thiru R. E. CHANDRAN JEYAPAL: Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) Whether the students of the Indian Institute of Engineering Technology, Arcot Road, Kodambakkam, Madras, have not been issued concessional travel tickets by the Pallavan Transport Corporation so far; and

(b) If so, the reasons for the delay ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) கொடுக்கப்பட வில்லை.

(ஆ) பயண சலுகை கட்டணச் சீட்டுக்கள் பள்ளி கல்வி இயக்குநர், தொழில் நுட்ப கல்வி இயக்குநர், கல்லூரி இயக்குநர், தொழிற் பயிற்சித்துறை இயக்குநர் மற்றும் சென்னை பல்கலைக் கழகத்தார் இவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மாண வர்களுக்கு மட்டுமே வழங்கப்பெறும். இவர்களில் யாராலும் கோடம்பாக்கத்திலுள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் என்ஜி னியரிங் டெக்னலஜி அங்கீகரிக்கப்படவில்லை.

THIRU R. E. CHANDRAN JEYAPAL : Hon. Mr. Speaker, Sir, will the travel concession facilities be made available to the employees of the State Legislature Department who have to attend office during Session from morning 7 o' clock to evening 7 o' clock ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. பொ. சிகாமணி : மாணவர்களுக்கு ஆல் ரூட் பஸ் பாஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் மாணவர்கள் நேரம் வீணாகிறது. குறிப்பிட்ட ரூட்டில் பாஸ் கொடுத்தால் நலமாகயிருக்கும் என்று பெற்றோர்கள் கருதுகிறார்கள். இதை அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னை நகரில் உள்ள மாணவர்களுக்கு ஆல் ரூட் பாஸ் என்று சொல்லப்படுகிற ரூபாய் 15 பாஸ் கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் 52 இலட்சம் ரூபாய் போக்குவரத்துக் கழகத்திற்கு நஷ்டம் ஏற்படுகிற நிலை இருக்கிறது. அதோடு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே அவ்வப்போது சில சச்சரவுகளும் ஏற்படுகின்றன. அந்த பாஸ் கொடுக்கப்பட்டதன் நோக்கமே மாணவர்கள் நூலகங்களுக்கு அந்தப் பஸ்பாஸைபயன்படுத்த வேண்டும் என்று நல்ல நோக்கத்தோடு கொடுக்கப்பட்டது. நூலகத்திற்கு மட்டும் அந்தப் பாஸை பயன்படுத்துமாறு அதை திருத்தியமைப்பதுபற்றி அரசு பரிசீலித்துவருகிறது.

திரு. கே. சௌந்திரராஜன் : சென்னை மாநகரில் இருக்கிற மாணவர்களுக்கு வழங்கப்படுகிற பஸ் பாஸ் போன்று பஸ் பாஸ்கள் கிராமப்புறங்களிலும் வழங்குவதற்கு உத்தேச முண்டா என்று அறியவிரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தமிழ்நாட்டில் பெரு நகரங்கள் பலயிடங்களில் அந்த முறை அமலில் இருந்து வருகிறது. கிராமப்புறங்களில் அதை நீட்டிப்பதற்கு வாய்ப்பில்லை. காரணம், இதனால் நஷ்டம் ஏற்படும் என்ற காரணத்தால் வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களில் தொழிலாளர்களைப் பங்குதாரர்களாக்கல்.

*வினா—603. திரு. ஆ. நடராசன் : மாண்புமிகுபோக்குவரத்துத் துறை அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழிலாளர்களை எந்தெந்த போக்குவரத்துக் கழகங்களில் பங்குதாரர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது ?

(ஆ) மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும், தொழிலாளர்களை பங்குதாரர்களாக ஏற்றுக் கொள்ளும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட உள்ளதா ?